Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 37 இதழ் - 7 ஜுலை - 2024



## 13.07.2024 - திருவள்ளூர் மாவட்டம், வெள்ளவேடு -ல் நடந்த இலவச மருத்துவ முகாமின் போது...





## ஆசானின் அறிவுரையிலே ...


1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. கர்த்தரின் பந்தி 11
3. பெண்கள் பகுதி 13
4. வாலிபர் பகுதி 16
5. சிறுவர் பகுதி 19
6. நீங்கள் பள்ளியில் படித்த... 20
7. மூப்பர், மேய்ப்பர், கண்காணிகள் 23
8. தேவ ஞானம் 28
9. எனக்காக யாவும் செய்து... 32

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 37 July - 2024 Issue - 7**

ஆசிரியர் உரை

## எதிரிகளை ஏன் விட்டு வைத்தார்?

பரலோக தேவன் பற்றி ஒருவன் அறிந்து கொள்வதற்கு அவரிடத்தில் ஏராளமான பண்புகளும், தன்மைகளும் மலைபோல் குவிந்து கிடக்கிறது. நம் தேவனின் இப்பண்புகளில் பலவற்றைப் பலர் அறிந்து வைத்திருந்தாலும், அவர் பற்றிய ஒரு பண்பு அநேகரால் அறியப்பட வேண்டிய அளவு அறியப்படாமல் இருக்கிறது. ஆம், அவர் **திட்டங்களின்** தேவனாகவும், **நோக்கங்களின்** பிதாவாகவும் இருக்கிறார் என்பது. ஆதியிலிருந்து நம் தேவன் இத்தன்மை கொண்டவராகவே இருந்து வருகிறார். மானிடம் பற்றிய அவருடைய பார்வையும், மானிடர்களுக்கான அவருடைய செயல்பாடுகளும் திட்டத்தோடும், நோக்கத்தோடுமே நிறைவேற்றப்பட்டு வந்திருக்கிறது. உதாரணமாக, தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வழிநடத்தின காலத்தில் அவர்களின் சீர்மிகு வாழ்க்கைக்கு துணை செய்யும்படியாகப் 10 கட்டளைகளைக் கொடுத்தார். அவைகளில் ஒன்று, ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்பது (யாத். 20:8). இப்படிச் சென்னவர் ஏன் இப்படியாக ஆசரிக்க வேண்டுமென்பதற்கான காரணத்தைப் பின்வரும் வசனங்களில் வெளிப்படுத்திக் கொடுக்கிறார். **கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். ஆகையால், கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்** என்று (20:11). தேவன் காரண காரியங்களின் தேவனாகவே உள்ளார்.

இந்த தேவன்தான் நியாயாதிபதிகள் நூல் 2:21–ல், **யோசுவா மரித்துப் பின் வைத்துப் போன ஜாதிகள் ஒருவரையும், நான் இனி அவர்களுக்கு முன்பாகத் துரத்தி விடாதிருப்பேன்** என்றார். இது, தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு அவர் ஆரம்பத்திலே வைத்திருந்த திட்டத்திற்கு மாறானது. எப்படியெனில், ஒரேப்

மலையடிவாரத்தில், ஓர் அற்புதக் காட்சியின் மூலம் மோசேயை சந்தித்து நடத்தின உரையாடலில், உன் பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்குக் கொடுத்த வாக்கின்படி, இஸ்ரவேலர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்த தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும், ஏத்தியரும், எமோரியரும், பெரிசியரும், ஏவியரும், எபூசியரும் இருக்கிற இடமாகிய **பாலும், தேனும் ஓடுகிற நலமும், விசாலமுமான தேசத்தில் கொண்டு போய்ச் சேர்க்கவும் இறங்கினேன்** என்றார் (யாத். 3:6–8). கானானின் பூர்வக் குடிகளாகிய இந்த ஆறு பிரிவாரையும் விரட்டி, அழித்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு கானான் தேசத்தைக் கொடுப்பது **ஞானமும், பெலனும்** கொண்ட தேவனுக்கு (யோபு 12:16) லேசான காரியம். ஆயினும், **நான் அவர்களைத் துரத்தி விடாதிருப்பேன்** என்றார். காரண காரியங்களின் தேவன் **பலமான காரணமில்லாமல்** இப்படிச் சொல்லியிருப்பாரா? கண்டிப்பாகச் சொல்லியிருக்க மாட்டார்.

அப்படியானால், காரணம் என்ன தான் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு ஏதுவாக, இதன் பின்னணிக்குள்ளாக நமது மாறாத வழக்கத்தின்படி கடந்து வந்து விடுவோம். சரியா!

மோசேயின் காலந்தொட்டு தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு எதிர்கள் சம்பந்தமாக வெளிப்படுத்தி வந்த ஒரு செய்தி உண்டு. கவனியுங்கள், நீ சுதந்தரிக்கப் போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப் பண்ணி, உன்னைப் பார்க்கிலும் ஜனம் பெருத்த ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெர்சியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும் போது **அவர்களை முறியடித்து அவர்களைச் சங்காரம் பண்ணக்கடவாய். அவர்களோடே உடன்படிக்கை பண்ணவும், அவர்களுக்கு இரங்கவும்** வேண்டாம் (உபா. 7:1,2). இன்னும், வசனம் 16–ல், உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும் போது **சகல ஜனங்களையும் நிர்மூலமாக்கக் கடவாய்; உன் கண் அவர்களுக்கு இரங்காதிருப்பதாக; அவர்கள் தேவர்களை நீ சேவியாமல் இருப்பாயாக;** அது உனக்குக் கண்ணியாயிருக்கும் (உபா. 7:16). இப்படியாக அவர் சாட்சி பகிர்ந்திருந்தும், அவர்கள் **கர்த்தர் கட்டளையிட்டபடி நடந்து கொள்ளவில்லை.** இதுபற்றிப் பின்னாளில் சங்கீதக்காரன் கூறும் போது, **கர்த்தர்** தங்களுக்குச் சொன்னபடி, அவர்கள் அந்த ஜனங்களை அழிக்கவில்லை. **ஜாதிகளுடனே கலந்து அவர்கள் கிரியைகளைச் கற்று அவர்களுடைய விக்கிரகங்களைச் சேவித்தார்கள். அவைகள் அவர்களுக்குக் கண்ணியாயிற்று... அவர்கள் கானான் தேசத்து விக்கிரகங்களுக்குப் பலியிட்டு, தங்கள் குமாரர், குமாரத்திகளுடைய குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தினார்கள். தேசம் இரத்தத்தால் தீட்டுப்பட்டது** (சங். 106:34–38).

இஸ்ரவேலர்கள் தங்களது பக்தி வாழ்வில் யோசுவாவின் சீரிய தலைமையின் கீழ் கொஞ்சம் அடக்கி வாசித்தார்கள் (யோசுவா 24:31). ஆனால், சுமார் 350 ஆண்டுகளை உள்ளடக்கிய நியாயாதிபதிகள் காலத்தின் ஆரம்ப நிலையிலேயே காரியங்கள் கைமீறிச் சென்று விட்டது. ஆம், **அக்காலத்தில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்ட பின்பு கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப் பின் எழும்பிற்று. அப்பொழுது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களை சேவித்து கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள்** (நியா.2:10-12). தொடர்ந்து 20-ம், வசனத்திற்கு வருவோமானால், 'ஆகையால், கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபம் மூண்டவராகி இந்த ஜனங்கள் தங்கள் பிதாக்களுக்கு நான் காண்பித்த **என் உடன்படிக்கையை மீறி என்னை சொல்லைக் கேளாதே போனபடியால்,** யோசுவா மரித்துப் பின் வைத்துப்போன ஜாதிகளில் ஒருவரையும் **நான் இனி அவர்களுக்கு முன்பாகத் துரத்தி விடாதிருப்பேன்** என்றார் (நியாய 2:21)

ஆக, அவர்களைத் துரத்தி விடாமலிருப்பதற்கு அவர்கள் உடன்படிக்கையை மீறினதும், அவருடைய சொல்லைக் கேளாமல் போனதும் தான் காரணம் என்று சொல்லும் தேவன், அவர்களை இப்படியாக விட்டு வைப்பதற்கு **இன்னொரு காரணமும் உண்டு** என்று தெளிவுபடுத்துகிறார். அதாவது, அவர்கள் **பிதாக்கள் கர்த்தரின் வழியைக் கவனித்துபோல அவர்கள் அதிலே நடக்கும்படிக்கு அதைக் கவனிப்பார்களோ இல்லையோ** என்று அவர்களைக் கொண்டு (கானானின் குடிகளைக் கொண்டு) இஸ்ரவேலைச் **சோதிப்பதற்காக** அப்படிச் செய்வேன் என்றார். அதற்காகவே கர்த்தர் அந்த ஜாதிகளை யோசுவாவின் கையில் ஒப்புக்கொடாமலும், அவைகளைச் சிக்கிரமாய்த் துரத்தி விடாமலும் விட்டு வைத்தார் (நியா 2:22,23).

தொடர்ந்து நாம் நியாயாதிபதிகள் மூன்றாம் அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களை வாசிக்கும் போது ஏன் விட்டு வைத்தார் என்பதற்கான மூன்று முக்கியக் காரணங்களை நாம் காண முடியும். அவைகளை நாம் இப்பொழுது, கவனித்து, நமது பக்தி வாழ்வுக்கான பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்

**I. புதிய தலைமுறை இஸ்ரவேலர்களை சோதிப்பதற்காக...**

தேவன் எதிரிகளைத் துரத்தாமல் கானானில் விட்டு வைத்ததற்கான மூன்று காரணங்களில் முதலாவதாக நம்மால் பார்க்க முடிவது அவர்களுடைய தேவ பகுதியைச் சோதிப்பது.

பொதுவாக சோதனை என்பது, ஒன்றின் **உண்மைத் தன்மை** அல்லது ஒருவருடைய **உண்மை நிலை** எது என்பதைத் தெரிந்துகொள்ள எடுக்கப்படும் ஒரு முயற்சி, சோதனை என்பது

தேவனை ஏற்று வாழ்பவர்களுக்கு புதிதான வார்த்தை அல்ல. ஏதேன் தோட்டத்திலேயே சோதனை ஆரம்பமாகிவிட்டது. பெரும்பாலான கிறித்தவ சமுதாயத்தால் அறிந்து வைக்கப்பட்டிருக்கும் விசுவாச சோதனை ஆதியாகமம் 22–ம் அதிகாரத்தில் பெற்றுள்ளது. அவ்வதிகாரத்தின் முதல் வசனத்திலேயே இந்தக் காரியங்கள் நடந்த பின்பு தேவன் ஆபிரகாமைச் **சோதித்தார்** என்று வாசிக்கிறோம். ஏகபுத்திரனாகிய ஈசாக்கை பலியிடக் கேட்டும் சோதனையின் முடிவில் **நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்** என்று தேவனால் பிரகடனப்படுத்தப்பட்டான் ஆபிரகாம் (ஆதி. 22:12).

இன்னும் சோதிக்கப்படுதல் குறித்து பேதுரு அப்போஸ்தலன் தன் முதலாம் நிருபத்தில் அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் **விசுவாசம் சோதிக்கப்பட்டு,** இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனம் மகிமையுமுண்டாகக் காணப்படும். (1பேதுரு 1:7). இதன்மூலம் விசுவாசம் சோதிக்கப்படுவது அவசியம் என்று கூறுகிறார். இன்னும், பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில், நீங்கள் **விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள், உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்.** இயேசுக் கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்' என்று எழுதியுள்ளார் (2 கொரி. 13:5) நம் பரத்துக்கான வாழ்வில் சோதனை என்பது அவசியம்.

இப்படிச் சோதனையை மையப்படுத்தும் தேவன் இப்படியாக அறிவிக்கிறார். 'கானான் தேசத்தில் நடந்த சகல யுத்தங்களையும் **அறியாதிருந்த இஸ்ரவேலராகிய அனைவரையும் சோதிப்பதற்காகக்** கர்த்தர் விட்டு வைத்த ஜாதிகள் என்று (நியா 3:1,2) சரி, எதற்காக தேவன் இந்தச் சந்ததியாரை இப்படி சோதிக்கிறார். **அவர்களின் பிதாக்கள் கர்த்தரின் வழியைக் காத்து நடந்தது போல இவர்கள் நடக்கிறார்களா?** என்பதை அறிந்து கொள்ளும்படி. இங்கே அவர்கள் பிதாக்கள் என்பது யோசுவாவின் நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேலர்கள் இவர்களோ அடுத்த தலைமுறை இஸ்ரவேலர்கள். தேவப் பார்வையில் உலகக் காரியங்கள் பெரிதாகப் பார்க்கப் படுவதில்லை. மாறாக, ஒருவரோ அல்லது ஒரு தலைமுறையினரோ கர்த்தரின் வழியில் நடக்கிறார்களா என்பதே முக்கியமாக இருக்கிறது. ஆகவேதான் இயேசு, **மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?** மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக எண்ணத்தைக் கொடுப்பாள் என்று கேள்வி எழுப்பியுள்ளார் (மத் 16:26)

அருமையானவர்களே, பரத்துக்கான வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் எதிரிகளோடும், எதிரான சூழ்நிலைகளோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது உண்மை. பல நேரங்களில் நமக்குள்ளாக எழும் கேள்வி தேவன் ஏன் இந்த எதிரிகளையும், எதிரான சூழ்நிலைகளையும் எங்கள் வாழ்வில் விட்டு வைத்திருக்கிறார் என்பது. இவைகள் இல்லாமலிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமே என்று நினைக்கிறோம். ஆனால், ஒவ்வொரு காரியத்துக்கும் தேவனுக்கு ஒரு நோக்கமுண்டு. அவர் காரண காரியங்களின் தேவனாக இருக்கிறார் ஏசாயா தீர்க்களின் நூல் 55:8–ல் **என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று** சொல்லுவதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

எதிரிகளையும், எதிரான காரியங்களையும் தேவன் விட்டு வைத்திருப்பதற்குக் காரணம் நம்மைச் சோதிப்பதே. எதற்காக சோதனை? நாம் கர்த்தரின் வழியைக் காத்து நடக்கிறோமா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வது. இதன் மூலம் நாம் பரலோக பாக்கியத்தை அதிகரித்துக் கொள்ள உதவி செய்வது, புரிகிறதா! ஆகவேதான் பேதுரு, பிரியமானவர்களே உங்களைச் **சோதிக்கும்படி** உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள் என்று கூறி பெலப்படுத்துகிறார் (பேதுரு 4:12,13) புரிந்து செயல்படுவோம்!

II. **புதிய தலைமுறை இஸ்ரவேலர்களை பழக்குவிப்பதற்காக...**

தேவன் எதிரிகளைத் துரத்தாமல் கானானில் விட்டு வைத்ததற்கான காரணங்களில் இரண்டாவது நம்மால் பார்க்க முடிவது, அவர்களைப் பழக்குவிப்பது.

பெதுவாக, பழக்கம் என்பது எடுத்த எடுப்பில் வரக்கூடிய ஒன்றல்ல. மாறாக, தொடர் செயல்பாடுகளால், முயற்சிகளால் விளையக்கூடிய ஒன்று. நம்மூரில் ஒரு சொல்லாடல் உண்டு **சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்** என்று. பயிற்சியும், முயற்சியும் ஒருங்கமைவதால் வருவது தான் பழக்கம், ஒன்றையோ அல்லது ஒருவரையோ ஒன்றுக்குப் பழக்குவிப்பதற்கு பொறுமையும், விடாமுயற்சியும், தேவை. இப்படிச் சிரத்தை மிக்க ஒரு செயலை இஸ்ரவேல் ஜனங்களுக்குச் செய்ய தேவன் விரும்புகிறார். இதன்மூலம், அவர்களைத் நேசிக்கிறேன் என்பதையும், அவர்களின் ஒட்டுமொத்த நலனில் அக்கறை கொள்கிறேன் என்பதையும் தீர்க்கமாக வெளிப்படுத்துகிறார்.

தன்னுடைய ஜனங்களைத் தான் விரும்பும் ஒன்றுக்குப் பழக்குவிப்பது தேவனுக்குப் புதிதான ஒன்றல்ல. எப்படியெனில், உபாகமம் 14:22–ல் **நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும்**

**பயந்திருக்கப் பழகும்படிக்கு வருடந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விலையும் எல்லாப் பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே உன் தானியத்திலும் உன் திராட்ச ரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும் உன் ஆடு மாடுகளின் தலையீற்றுகளையும்** அவருடைய சந்ததியில் புசிப்பாயாக என்று கூறுகிறார். இப்படி கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழக்கின தேவன், தன்னை **யுத்தத்திற்குப் பழக்குவித்ததாக** தாவீது கூறுகிறார். **வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார்** என்று [2 சாமு17:19].

இந்த தேவன் தான் **இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரும் அதற்கு முன் யுத்தஞ்செய்ய அறியாதிருந்தவர்களும் அவைகளை அறியும்படி பழக்குவிக்கிறார்.** [நியா. 3:2]. இந்தப் புதிய சந்ததியார் யோசுவாவின் தலைமையின் கீழ் கானானை மேற்கொள்ள நடந்த யுத்தங்களில் பங்கு பெறாதவர்கள். ஆகவே, இவர்களுக்கு போர் பற்றிய அறிவும், போர்க்கலை சம்பந்தமான நுணுக்கங்களும் தெரியாது. இதே நிலை தொடருமானால் ஒரு கட்டத்தில் இஸ்ரவேலர் கானானில் தொடர்ந்து இருக்க முடியாத நிலை ஏற்படும். ஆகவே, அவர்களுடைய எதிர்கால நாலனை மனதில் கொண்டும். பெரிய போர்களில் அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவும், யோசுவாவால் துரத்தி விடப்படாமலிருக்கிற ஜாதிகளைக் கொண்டு பயிற்சி கொடுத்துப் பழக்குவிக்கும்படி திட்டமிடுகிறார்.

அருமையானவர்களே! அவருடைய பிள்ளைகள் மீதான அவருடைய அக்கறையும், கரிசனையும் வியப்பாக இல்லையா ? மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, ஏன் எதிரிகளைத் துரத்திவிடாமல் தேவன் விட்டு வைத்தார் என்று எண்ணத் தோன்றினாலும், அவர் சொல்லும் காரணங்களைப் பார்க்கும்போது தேவன் மீதான நம்முடைய பற்றும், பிடிப்பும், மதிப்பும் அதிகரிக்கவல்லவா செய்கிறது.

தேவன் நம்மைப் பழக்கவிக்கும்போது அவர் கொடுக்கும் பயிற்சியை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். உதாரணமாக **சபை கூடி வருதலை விட்டு விடாதிருங்கள்** [எபி. 10:25] என்று அவர் கூறும்போது நாம். தவறாமல் வாரத்தின் முதல்நாள்தோறும் சபையாகக் கூடி வருவதற்கு நம்மைப் பழக்குவிக்கிறார். இதை நாம் புரிந்து இம்மை வாழ்வின் நலனுக்காகவும், மறுமை வாழ்வின் நலனுக்காகவும் நாம் கீழ்ப்படிய வேண்டும். ஓசியா தீர்க்கனைக்கொண்டு எப்பிராயீமைப் பற்றி தேவன் சொல்லியது போல் நம்முடைய நிலை மாறிவிடக்கூடாது பாருங்கள். **நான் எப்பிராயீமை கைபிடித்து நடக்கப் பழக்கினேன்; ஆனாலும், நான் தங்களை குணமாக்குகிறவரென்று அறியாமல் போனார்கள்** [ஓசியா 11:3] பரலோகத்தின் தேவன் மிகுந்த கரிசனை கொண்டவராக நமக்குத்

தேவையான வசன போதனைகளைத் தந்து, முன்னுதாரண மூலமாக அவருக்கான பக்தி வாழ்வில் நாம் தேறும்படியாக பழக்குவிக்கிறார். ஆகவே, பரலோக பாக்கியத்திற்கான அனைத்தையும் பழகுவோம்.

III. புதிய தலைமுறை இஸ்ரவேலர்களின் கீழ்ப்படிதலை அறிவதற்காக...

தேவன் எதிரிகளைத் துரத்தாமல் கானானில் விட்டு வைத்ததற்கான காரணங்களில் மூன்றாவதாக நம்மால் பார்க்க முடிவது. அவர்களின் கீழ்ப்படிதலை அறிந்து கொள்வது.

வேதாகமம் கீழ்ப்படிதலுக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கிறது. ஏனெனில், உலகில் முதன்முதலாகத் தோன்றின பாவத்திற்கு அடிப்படை கீழ்ப்படியாமை தான். ஆகவே தான், அன்று தொடங்கி வேதாகமத்தின் முடிவு வரைக்கும் கீழ்ப்படிதல் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. **கீழ்ப்படிதல் என்பது அதிகாரத்திற்கு ஒப்புக்கொடுப்பது.**

தேவன் – மனிதன் என்று வரும்போது தேவ அதிகாரத்திற்கு மனிதன் ஒப்பு கொடுக்க வேண்டும். கணவன் – மனைவி என்று வரும்போது கணவன் அதிகாரத்திற்கு, பெற்றோர் – பிள்ளைகள் என்று வரும்போது பெற்றோர் அதிகாரத்திற்கு, எஜமான் – வேலைக்காரன் என்று வரும்போது எஜமான் அதிகாரத்திற்கு, அரசாங்கம் – குடிகள் என்று வரும்போது அரசு அதிகாரத்திற்கு, இன்னும் கிறிஸ்து – சபை என்று வரும்போது கிறிஸ்துவின் அதிகாரத்தில் என்று இப்படி அதிகாரத்திற்கு ஒப்புக் கொடுப்பதுதான் கீழ்ப்படிதல்.

பக்தி வாழ்வில் கீழ்ப்படிதலை தேவன் மிகவும் எதிர்பார்க்கிறார். அவருடைய அதிகாரம் கேள்விக்கிடமாவதை அவர் ஒருபோதும் பொறுத்துக் கொள்வதில்லை. தேவ அதிகாரத்தை எதிர்ப்பவர்கள் யாராக இருந்தாலும், அது எத்தனை பேராக இருந்தாலும் அதற்கான விலையைக் கொடுத்து தான் தீர வேண்டும். கன்மலையைப் பார்த்து பேசு என்று பணிக்கப்பட்ட மோசே கண்மலையை ஓங்கி அடித்ததினிமித்தம் தேவக்கோபம் அவன்மேல் வந்தது [எண் 20:11,12]. கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை இழந்தான். எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர்களில் யோசுவா, காலேப் தவிர மற்ற யாவரும் கீழ்ப்படியாமையினாலே வனாந்திரத்தில் மடிந்து போனார்கள் [எண் 32:13] இன்னும் 1 ராஜா 20:36, இப்படியாக கூறுகிறது; அப்பொழுது அவன் இவனைப் பார்த்து: **நீ கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமற் போனபடியால்** இதோ நீ என்னை விட்டுப் புறப்பட்டு போனவுடனே ஒரு சிங்கம் உன்னைக் கொல்லும் என்றான். அப்படியே இவன் அவனை விட்டு புறப்பட்டவுடனே ஒரு சிங்கம் இவனைக் கொன்று போட்டது.

கீழ்ப்படிதலின் மேன்மையை சாமுவேல் தீர்க்கனைக் கொண்டு தேவன் என்ன சொல்லுவதைப் பாருங்கள்; **கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக்கிடாக்களின் நிலத்தைப் பார்க்கிலும் செவி**

கொடுத்தலும் உத்தமம் [1 சாமு 15:22] என்றார்.

இப்படிக் கீழ்ப்படிதலை விரும்பி எதிர்பார்க்கும் தேவன், யோசுவா காலத்துப் பிதாக்கள், கர்த்தரின் வழியைக் கவனித்தது போல **இந்தப் புதிய தலைமுறையினர்** கர்த்தரின் வழியிலே நடக்கும்படிக்கு அதைக் கவனிப்பார்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு எதிரிகள் விடப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்.

அன்பானவர்களே! தேவன் அவருடைய ஜனங்களிடமிருந்து இப்படியாகக் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கும் போது, நம்முடைய கீழ்ப்படிதலின் லட்சணம் தேவப் பார்வையில் எவ்வாறாக உள்ளது? தேவன் **எதிரிகளை இதற்காகத் தான் விட்டு வைத்தேன்** என்கிறார். ஆகவே, நம்முடைய கீழ்ப்படிதல் சோதனைக்குள்ளாக்கும்படியாய் தேவன் நமக்கு எதிரானவைகளை நம் பக்தி வாழ்வில் விட்டு வைத்திருக்கலாம். யாருக்குத் தெரியும்?

இப்பகுதியில் எதிரிகள் விடப்பட்டதற்கான காரணங்களை தேவன் கொடுக்கும்போது, **சோதிப்பதற்காக, பழக்குவிப்பதற்காக மற்றும் அறிந்து கொள்வதற்காக** என்றே கூறுகிறார். ஆம், **தண்டிப்பதற்காக** என்று கூறவில்லை. ஆக, அவர்களைத் தேவனுக்கான நம் வாழ்வில் எதிரானவைகள் ஆவியிலும், சரீரத்திலும் ஒருவேளை இருக்குமானால் அதற்கு ஒரு நோக்கமுண்டு என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதை நாம் தண்டனையாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. அதே வேளையில், அவருடைய நோக்கத்தையும், எதிர்பார்ப்பையும் புரிந்து அதற்கேற்றவாறு நாம் நடக்கிறவர்களாக இருக்க வேண்டும். இந்த உண்மை அப்போஸ்தலர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆகவேதான், ஒரு சவாலான நேரத்தில், பேதுருவும், யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: **தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ? என்று கேள்வி எழுப்பினார்கள்** [அப். 4:29], இன்னும் அப்போஸ்தலர் 5-29ல், அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும், **மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது** என்றார்கள்.

ஆம், தேவனுக்குக் கீழ்ப்படிவது மிகவும் முக்கியம். அப்படி நாம் கீழ்ப்படிவதை அறிந்து கொள்ள தேவன் விரும்புகிறார். கிறிஸ்துவின் அதிகாரத்தின்படியாக புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு தான் கர்த்தரின் ஒரே சபையில் இடமுண்டு [அப் 2:37,38,47], முடிவு பரியந்தம் கர்த்தரின் சபையில் நிலைத்திருப்பவர்கள் தான் [மத் 10:22 வெளி 2:10] பரலோக பாக்கியம் பெற முடியும். இப்படிபட்ட பாக்கியம் முழுமையான கீழ்ப்படிதல் மூலம் நம் எல்லோருக்கும் கிடைப்பதாக! ஆமென்!!

✝

# கர்த்தரின் பந்தி

J.C. சோட்

**ஆ**ராதனையின் மற்றுமோர் பகுதி கர்த்தரின் பந்தியாகும். மனிதன் மிகவும் மறதி படைத்தவன் என்பதை கிறிஸ்து அறிந்தார். எனவே, அவன் நினைவு கூரும்படியாக, அவனுக்கு உதவியாக இருக்கும் ஒன்றை விட்டுச் செல்ல அவர் விரும்பினார். இந்த நினைவு கூருதல் கர்த்தரின் பந்தி என அறியப்படுகிறது.

மேற்கொண்டு படிப்பதற்கு முன்பு, இது எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்பதை நாம் முதலில் பார்ப்போம். மத்தேயு 26:26 – 28 வசனங்களைப் பாருங்கள் ‘அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீடர்களுக்குக் கொடுத்து : நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து : நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப் புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது‘. அது எவ்வளவு எளிமையானதாக இருந்தது என்பதைக் கவனியுங்கள். **அப்பமானது** தமது **சரீரத்தின் மாதிரியாக** இருப்பதால், அதை தமது சரீரத்தின் நினைவாக உட்கொள்ள வேண்டும் என கிறிஸ்து குறிப்பிட்டார். பின்னர், **திராட்ச ரசத்தை** தமது **இரத்தத்தின் மாதிரியாகக்** கருதி, அவருடைய இரத்தத்தின் நினைவாக பருக வேண்டும் என அவர் கூறினார். வேறுவிதமாகக் கூறினால், சிலுவையில் தாம் அவர்களுக்காகப் படப்போகும் பாடுகளை தமது சீடர்கள் மறப்பதை கிறிஸ்து விரும்பவில்லை. எனவே தான், ஒவ்வொரு கர்த்தரின் நாளிலும் அவருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூரும்படியாக அவர்கள் அப்பத்திலும் திராட்ச ரசத்திலும் பங்கு பெறும் போது, அவருடைய பாடுகள் அவர்களின் மனதிலே புதிதாக நிலைத்திருக்கும்.

பவுல் கொரிந்து சகோதரர்களுக்கு எழுதுகிறார் : ‘நீங்கள் ஓரிடத்தில் கூடி வரும் போது அவனவன் தன் தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்: ஒருவன் பசியாயிருக்கிறான்; ஒருவன் வெறியாயிருக்கிறான். இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே. புசிக்கிறதற்கும், குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டை பண்ணி இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழ்வேனோ? புகழேன். நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய

இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து. ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு நீங்கள் வாங்கிப்புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து : இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் **என்னை நினைவு கூரும்படி** இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க. எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில் அபாத்திரமாய்ப் போஜன பானம் பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான்.‘ (1 கொரிந்தியர் 11:20−29).

இப்போது கர்த்தரின் பந்தியை கொரிந்து சகோதரர்கள் நடத்தி வந்த விதத்தைக் குறித்து பவுல் ஆரம்பத்தில் அவர்களைக் கண்டிக்கிறார். கர்த்தர் கற்பித்தபடியாக அதில் பங்கு கொள்ளாமல் வயிறார சாப்பிட்டு குடிக்கும் ஒரு விருந்தாக அவர்கள் அதை மாற்றிவிட்டிருந்தனர். கர்த்தரின் பந்தியின் நோக்கம் அதுவல்ல. மாறாக, அதனுடைய உண்மையான நோக்கம் என்ன என்பதையும் அதில் எப்படி பங்கு பெற வேண்டுமென்பதையும் அவர்களுக்கு அவர் காண்பித்தார். இந்தச் செய்தியை எல்லாம் கர்த்தரிடமிருந்து தாம் பெற்றுக் கொண்ட தாகவும் பவுல் அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார்.

**அவை:**

1. கர்த்தர் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில் இந்த பந்தியை அவர் ஏற்படுத்தினார்.
2. பிட்கப்படுகிற அப்பமானது தமது சரீரத்தை அவர்களுக்கு நினைப்பூட்டுவதாக இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.
3. அதுபோலவே திராட்ச ரசத்தையும் எடுத்து அதை எல்லாரும் தமது இரத்தத்தின் நினைவாக பருக வேண்டுமென அவர் காண்பித்தார்.
4. அதில் பங்கு பெறும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவரது மரணத்தை நினைவு கூருவதாகக் காட்டுகிறது.

தொடரும்...

பெண்கள் பகுதி

# முழுமையான கிறிஸ்தவப் பெண்

ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! ஸ்தோத்திரம். முழுமையான கிறிஸ்தவப் பெண் என்றால் என்ன? இதற்குண்டான பதிலை நாம் ஒரே வரியில் சொல்லிவிட முடியாது. இது அநேக பண்புகளை உள்ளடக்கியுள்ளது. நாம் முழுமையான கிறிஸ்தவப் பெண்களாக திகழ்வதற்கு தேவன் நமக்கு குணாதிசயங்களை கொடுத்திருக்கிறாரா? ஆம், நாம் முழுமையாகும்படி பூமிக்குண்டான ஞானத்தை தேடிச் செல்ல வேண்டியதில்லை. வேதாகமம் தேவையான அனைத்தையும் நமக்கு கொடுத்திருப்பதால் அவைகளை வழிகாட்டியாக வைத்து நம்மை முழுமைப் படுத்திக் கொள்ள முடியும்.

**மூன்று வேத பகுதிகளை இங்கு காண்போம்**

**[கலாத்தியர் 5:22-24] :** - ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம்,இச்சையடக்கம், இப்படிப் பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை

**கொலோசெயர் : 3:12-14 :** - ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத் தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும், தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்.

**1 பேதுரு : 1:5-7 :**- இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும்

இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும் தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

மேற்கண்ட வசனங்களில் எவ்வளவு பண்புகள் நிறைந்து கிடக்கிறது. என்பதை பாருங்கள்! இவ்வளவையும் பரிசுத்த

ஆவியானவர் நமக்கு கொடுத்திருக்கிறார். நாம் முழுமையானவர்களாக ஜீவிக்க வேண்டும் என்பதில் தேவன் எந்த அளவு அக்கறையுள்ளவராக இருக்கிறார் என்று நினைக்கும் போது நாம் அவருக்கு ஓயாமல் நன்றி செலுத்த வேண்டும். இனி இதில் விசுவாசம், அன்பு, பொறுமை ஆகிய மூன்றை மட்டும் இம்மாதம் பார்ப்போம்.

**முழுமையான வாழ்க்கைக்கு அஸ்திபாரம் போன்றது விசுவாசம் :–**

**விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்.** [எபி : 11:6] கிறிஸ்தவ மார்க்கமே விசுவாசத்தின் மார்க்கம் தான். விசுவாசத்தை பெற்றுக்கொள்ள வேதத்தை நாம் படித்து தியானிக்க வேண்டும். வசனங்கள் அனைத்துமே தேவ ஆவியினால் அருளப்பட்டது என்று விசுவாசிக்க வேண்டும். **விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்** [ரோமர் : 10:17] வசனம் சொல்கிறபடி வசனத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். அப்போதுதான் மற்ற குணாதிசயங்கள் நம்மில் குடி கொள்ளும். அஸ்திபாரமான விசுவாசமே இல்லையானால், அன்பு, இரக்கம், பொறுமை, தயவு, சாந்தம், ஞானம் இவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. விசுவாசம் நம்மை ஞானஸ்நானத்திற்கு வழிநடத்துகிறது. ஞானஸ்நானம் நம்மை இரட்சித்து, கிறிஸ்து தன் இரத்தத்தை சிந்தி சம்பதித்த அவருடைய சபையில் சேர்த்துக்கொள்கிறது.

**விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக் கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்** [மாற்கு 16:16] ஆக, விசுவாசம் நம்மை பூரணத்துக்கு அழைத்துச் செல்கிறது.

**ஒரு முழுக்கிறிஸ்தவ வாழ்க்கைக்கு வெளிப்படையாய் தெரியும் குணம் அன்பு:–**

நாம் எவ்வளவுதான் நல்ல பண்புகள், குணாதிசயங்களைப் பெற்றிருந்தாலும் அவைகள் அன்போடு கூட இல்லாமல் இருந்தால் அனைத்தும் வீண்தான். உலகிற்கு நம்மை வேறுபடுத்திக் காட்டுவது இந்த அன்பு. **பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம். ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். 1யோவான் 4:7**

அன்புள்ள ஒருவர் அதை தன் கிரியையில் காண்பிக்க வேண்டும். தேவன் நம்மீது எவ்வாறு அன்பு கூர்ந்தார்? தன் ஒரே பேரான குமாரனைக் கொடுத்ததின் மூலமாக [யோவான்: 3:16] அவர் நம்மீது கொண்ட அன்பை விளங்க பண்ணினார். யாக்கோபு ஆசிரியர் சொல்வது போல நம்முடைய அன்பு, புசித்து திருப்தியாயிரு, குளிர்காய் என்று வாயிலே கூறும் அன்பாக இருக்கக்கூடாது.[யாக்கோபு 2:16] [1 யோவான் 3:18] ஆக தேவன் எப்படி மனிதர்கள் யாரும்

நினைத்துபார்க்கக்கூட முடியாத ஒரே பேரான குமாரனை கொடுக்கும் அன்பை வெளிப்படுத்தினாரோ அதே போல் நாமும் தேவன் மீது அன்பு காட்ட வேண்டும். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூறுவதாம் [1யோ: 5:3]

முதலாவது, நம் அன்பு தேவன் மீது இருக்க வேண்டும். அப்படியானால் அவர் வெளிப்படுத்தியுள்ள வசனங்களை நாம் அப்படியே கைக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் இந்த அன்பை நம் வாழ்வில் கடைப்பிடித்தாக வேண்டும். அப்போது நம் வார்த்தை,செயல், எல்லாவற்றிலும் ஒரு மாற்றத்தை பிறர் காணமுடியும். நம் கணவர்,நம் பிள்ளைகள் நம்மில் பாடம் கற்றுக் கொள்ள இது பெரிதும் உதவும்.

இப் பண்புகளை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்வோம். அப்போது நாம் முழுமையடைய அது உதவி செய்யும்.

3 **பொறுமை :-** இந்த அவசர உலகில் ஒரு கிறிஸ்தவப் பெண் இந்த பண்பைப் பெற்றுக்கொள்வதென்பது சற்று சிரமம்தான். நம்மிலேயும், நம் பிள்ளைகள், நம்மிடம் பழகுகிறவர்கள், நம் கணவன், உறவினர் என்று எல்லோரிடமும் நாம் பொறுமையை இழந்து விடுகிறோம். ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்கு பொறுமை மிகவும் அவசியம். **உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்.** [லூக்: 21:19]

நீண்ட பொறுமையோடிருக்க வேண்டும். ஏனென்றால் அது நம் ஆத்மா சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. பொறுமையை நாம் எங்கிருந்து பெற்றுக் கொள்ள முடியும்? வேத வசனத்திலிருந்து மட்டுமே '**தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும்....**' [ரோமர் 15:4] **உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்** [யா: 1:3] **முழுமையான கிறிஸ்தவப் பெண்ணாவதற்கு பொறுமை அவசியம்.** முதிர்ந்த கிறிஸ்தவப் பெண் கட்டாயம் பொறுமையுடையவளாகத்தான் இருப்பாள். பொறுமை, வார்த்தையில் பொறுமை, செய்கையில் பொறுமை, எல்லாவற்றிலும் பொறுமை காட்டுவது மிகவும் நல்லது.

இப்படி நல்ல பண்புகளை வளர்த்துக் கொண்டால்தான் நாம் முழுமையான கிறிஸ்தவப் பெண்ணாகத் திகழமுடியும். முழுமையான கிறிஸ்தவப் பெண் தான் பரலோகம் செல்ல முடியும். எனவே, கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே வேதம் சொல்லுகிற அனைத்து பண்புகளையும் தெரிந்து, நம்மில் வளர்த்துக் கொள்ள தேவன் உதவி செய்வாராக! ஆமென்

✝

## வாலிபர் பகுதி

# வாழ்க்கையின் பார்வை

Dr. ஏபில் நாயகம்

**கி**றிஸ்துக்குள் பிரியமான வாலிபர்களே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். கிறிஸ்துவின் பெயரை தரித்து கொண்டிருக்கிற நாம் நம்முடைய எண்ணங்களிலும், சிந்தனைகளிலும் வித்தியாசமானவர்கள் என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இந்த பூமியில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையைக்குறித்தான பார்வை கிறிஸ்துவை அறியாதவர்கள் கொண்டிருக்கும் பார்வைக்கு சற்று மாறாகவே இருக்க வேண்டும். ஏனென்றால், வாழ்க்கையின் மீது நம்முடைய பார்வை நம்முடைய வாழ்வியலையும் வாழ்வின் போக்கையும் முடிவுசெய்கிறது. நம்முடைய நேரத்தை, செல்வத்தை, திறன்களை, உறவுகளை எவ்வாறு கையாளுகிறோம் என்பதெல்லாம் வாழ்க்கையின் மீது நாம் கொண்டுள்ள பார்வையே தீர்மானிக்கிறது.

வாழ்க்கையைக் குறித்து நாம் பிறரிடம் கேட்டோமென்றால், வாழ்க்கை என்பது ஒரு நாடக மேடை, ஒரு சக்கரம் போன்றது, புரியாத புதிர், ஒரு நீண்ட பிரயாணம் என பல உருவகங்களால் அவரவர்களுக்கு புரிந்த வண்ணம் அதை விவரிப்பார்கள். ஒவ்வொருவரும் அந்தந்த உருவகங்களை மையப்படுத்தி தான் அவர்களுடைய வாழ்வின் நிகழ்வுகளை புரிந்துகொள்ள விரும்புவார்கள். அதுமட்டும் அல்ல வாழ்க்கையின் போக்கையும் அதை வைத்து முடிவு செய்வார்கள். உதாரணமாக, வாழ்க்கை ஒரு நீண்ட பயணம் என்று எண்ணுபவர் வேகமாக செயலாற்றுவதை விரும்பாமல் வேகத்தை விட விவேகமும் பொறுமையும் முக்கியம் என்று சொல்லுவார். வாழ்க்கை ஒரு ஓட்டம் என்று எண்ணுபவர் வேகம் முக்கியம் என்று நினைப்பார்.

பிரியமானவர்களே, தேவனையும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவையும் ஏற்று கொண்டவர்களாகிய நாம் எப்படிப்பட்ட உருவகங்களை நம் வாழ்வை பிரதிபலிக்கப் பயன்படுத்த வேண்டும் என்கிற சிந்தனை, அதற்கான தேடல் மிகவும் அவசியமானது. நாம் நம் உலக அறிவையும் நாம் காண்கின்ற கேள்விப்படுகிற காரியங்களையும் அடிப்படையாகக் கொண்டு நாம் நம் வாழ்விற்கான உருவங்களையும் அதினடிப்படையில் நம் வாழ்க்கையையும் நடத்துவோமானால், தேவனால் நாம் எதற்காக படைக்கப்பட்டோமோ அந்த உன்னத நோக்கம் நிறைவேறாது. தேவன் மனிதனுடைய வாழ்க்கையை எவ்வாறாகப் பார்க்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேதாகமம் மூன்று உருவகங்களை நமக்குத் தருகிறது. அந்த மூன்றையும் ஒவ்வொன்றாக நாம் பார்க்கலாம்.

**1. இவ்வுலக வாழ்க்கை ஒரு சோதனை:**

இந்த உருவகத்தை வேதாகமப் பக்கங்கள் முழுவதிலும் நாம் காண முடியும். குறைந்தது **இருநூறு முறை சோதனை** என்ற வார்த்தையும் அதனோடு சம்பந்தப்பட்ட வார்த்தைகளையும் வேதம் பயன்படுத்து கிறது. பல மனிதர்கள் தேவனால் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக, தன்னுடைய ஒரே பேறான குமானை கொடுப்பானோ என்று ஆபிரகாமை சோதித்தார். ஆதாம் மற்றும் ஏவாள் தொடங்கி இன்றளவும் அது நடந்துகொண்டிருக்கிறது. இந்த சோதனையில் வெற்றிபெற்றவர்களும் இருக்கிறார்கள், தோற்றவர்களும் இருக்கிறார்கள். ஆக, சோதனை என்பது ஒருவரை யார் என்றும் வெளிக்காட்டுகிறது. அதே வேளையில் ஒருவர் வாழ்வில் முதிர்ச்சி அடையவும் உதவுகிறது. தாவீது சோதைனையில் தோற்றாலும் சோதனையின் முடிவில் அவருடைய வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் உதவியது.

நாம் இங்கே கவனிக்கவேண்டியது என்னவென்றால், தேவன் நம் வாழ்வின் ஒவ்வொரு நகர்வையும் கவனித்து கொண்டிருக்கிறார். நம் வாழ்வின் நடக்கும் சிறு சிறு நிகழ்வுகளும் நமக்கு கொடுக்கப்படுகின்ற சோதனைகளாகப் பார்க்க பழக வேண்டும். இந்த சோதனைகளில் நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதை தேவன் கவனிக்கிறார். எதை வைத்து தேவன் நம்மை சோதிப்பார் என்பதை நாம் கணிக்க முடியாது எனவே, நம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வையும், சிறிதானாலும் பெரிதானாலும் அது முக்கியம் என்று கருதவேண்டும். மிகவும் முக்கியமாக நெருக்கடியான நேரங்களிலும், தேவன் என்னை கைவிட்டாரோ என்று எண்ணக்கூடிய தருணங்களிலும் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

இந்தப் புரிதல் மிகவும் அவசியமானது. ஏனென்றால், நம் வாழ்வின் சிறு சிறு நிகழ்வுகளிலும் நம்மை கவனமாக இருக்க **இவ்வுலக வாழ்க்கை ஒரு சோதனை,** உருவகம் உதவுகிறது. மேலும் நாம் வாழ்க்கையின் சோதனைகளில் வெற்றி பெற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். எனவே, சோதனைகளை நாம் கையாள அவர் நமக்கு கொடுக்கும் கிருபையை விட சோதனை பெரிதாக இருக்க தேவன் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். **மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.** என்று 1 கொரிந்தியார் 10 :13 இல் நாம் வாசிக்கிறோம். மேலும், நாம் சோதனைகளை வெற்றிகரமாய் தாண்டும்போது அதற்கான பரிசையும் தேவன் தருகிறார். 'சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில்

அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். என்று யாக்கோபு ஆசிரியர் கூறுகிறார் (1:12).

வாலிப பருவத்தில் நம் வாழ்க்கையை புரிந்து கொள்ள இந்த உருவகத்தை பயன்படுத்துவோமானால் நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் நம்மை கவனமாகக் காத்துக் கொள்ள உதவவும் நம்முடைய செயல்களும் சிந்தைகளும் தேவனுடைய சித்ததோடு இணங்க வழிவகுக்கும். நாம் செலவழிக்கும் நேரம் பணம், நாம் விரும்புகிற காரியம், வெறுக்கிற காரியம், எதற்கு முன்னுரிமை கொடுக்கிறோம், என்று ஒவ்வொரு காரியமும் தேவனுடைய சித்தத்திற்கு இசைந்து இருக்கிறதா என்று நாம் சிந்திக்கும்படி இந்த பார்வை நமக்கு உதவுகிறது.

(தொடரும்)

✝

---

## பிரச்சனைகளுக்கான தீர்வு!

பிரச்சனைகள் வரும் சங்கட சமயங்கல் நாம் கைகளை பிசைவதைக் காட்டிலும் எல்லாவற்றையும் தேவனுடைய கைகளில் விட்டுவிட்டால் கடைசியில் தேவனுடைய கைகள் எல்லாவற்றிற்கும் மேலாக இருந்து தீர்க்கமாக விசாரிக்கிறபடியால், உங்கள் கவலைகளை யெல்லாம் மாற்றிப்போடும் (I பேதுரு 5:7)

நியாயம் எல்லாம்
தெரியாது.
எந்த பக்கம்
கனமாக இருக்கிறதோ
அந்த பக்கம்
சாய்ந்து விடும்...
இந்த உலகமும்
அப்படித்தான் போல...



சிறுவர் பகுதி

# தேவமனிதன்–4

Dr. ப்ரைசி ஏபில்

**ஹெ**லோ குழந்தைகளே !நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம்.எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.இந்த மாதம் வேறொரு தேவ மனிதனைப் பற்றி பார்ப்போம் – அவர் பெயர் சாமுவேல்

சாமுவேல் தன் அம்மாவுக்குக் கீழ்ப்படிந்து பிரதான ஆசாரியனாகிய ஏலியுடன் வாழ்ந்தார். சாமுவேலை கர்த்தர் கூப்பிட்ட போது தன்னை அழைத்தது ஏலி என்று நினைத்து மூன்று முறை ஏலி இடம் ஓடினான். சாமுவேல் ஏலிக்குக் கீழ்ப்படிந்து தேவனுக்கு செவிசாய்த்தார். சாமுவேல் வாழ்வின் எல்லா நேரங்களிலும் தேவனுக்கு கீழ்ப்படிந்தார்.



சாமுவேல் சிறு வயதிலேயே தனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை விட்டுவிட்டு ஆலயத்தில் தங்க ஒப்புக்கொண்டார். ஏனென்றால், அவன் தன் தாய்க்குக் கீழ்ப்படிந்தான். பெரியவர்களுக்குப் பதிலளிப்பது கூட நம்மில் அநேகருக்குச் சிரமமாக இருக்கும் போது, ஏலி தான் தன்னை அழைத்தது என்று நினைத்து நடு இரவில் ஓடினான். அவர் ஏலிக்குக் கீழ்ப்படிந்து அதன் மூலம் தேவனிடம் பேசினார்.


அன்பான நண்பர்களே, நாம் இந்த தேவ மனிதனைப் போல் இருக்கிறோமா? நம் பெற்றோருக்கும், பெரியவர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக நமது பரலோகத் தந்தைக்கும் கீழ்ப்படிகிறவர்களாக உள்ளோமா?

*With lots of love*
*Praisey akka* ✝

# நீங்கள் பள்ளியில் படித்த விஞ்ஞான தத்துவங்கள்


**தமிழில். Bro. சாமுவேல் ராஜ், சத்தி**

**ஆதியிலே தேவன் .......... உண்டாக்கினார்**




படைப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி மக்களுக்குத் தோன்றியிருந்த பல எண்ணங்களைப் பற்றி உங்கள் விஞ்ஞான வகுப்பில் நீங்கள் கற்றுக்கொள்ளவிருக்கிறீர்கள். தேவனுக்கும் படைப்புக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றும் எல்லாமே இயற்கையாகத் தோன்றியவையே என்றும் சிந்திக்கும் ஒரு ஆசிரியரோ அல்லது நண்பனோ கூட உங்களுக்குக் கிடைக்கக்கூடும். இப்படிப்பட்ட சில தத்துவங்களை நாம் காண்பதோடு அவை அர்த்தமுள்ளவைதானா என்றும், படைப்பு எவ்வாறு ஏற்பட்டது என்ற கேள்விக்கு அவை பதிலளிக்கின்றனவா என்றும் நாம் பார்ப்போம்.

**மேக சுழற்சி (The Nebular Theory)**



மேகத்தைப் போன்ற பொருளின் மிகப்பெரிய ஒரு சுழற்சியின் விளைவால் படைப்பு தோன்றியதாக சில மக்கள் நம்புகின்றனர். இந்தக் கருத்துப்படி மேகமூட்டத்தில் சிறு நீர்ச்சுழல்கள் பல சேர்ந்து,மண்டலங்களையும், நாம் காணும் சகலவற்றையும் உருவாக்கியுள்ளன என்பதில் தவறு என்ன? இதில் முக்கிய தவறு என்னவென்றால் நாம் கேட்கும் கேள்விக்கு இது பதில் அளிப்பதில்லை. அந்த மேகம் எங்கிருந்து வந்தது? அந்த மேகம் உருவாகத் தேவையான பொருட்களை யார் உண்டாக்கினார் அல்லது எது உண்டாக்கியது? இந்த மேக சுழற்சி தத்துவத்தை அறிமுகப்படுத்தியவர்கள் முக்கியமான இந்தக் கேள்விக்கு பதில் அளிக்கவில்லை. சுழற்சியில் பொருட்கள் எவ்வாறு மாறுபட்ட நிலையை அடைந்திருக்க முடியும் என விளக்கினார்களே தவிர, அதற்கான மூலப்பொருள் எங்கிருந்து வந்தது என அவர்கள் கூறவில்லை.

**பலத்த மோதல் தத்துவம்** (The Big Bang Theory)



பல காலத்திற்கு முன்பு ஒரு பயங்கரமான பெருவெடிப்பு ஏற்பட்டு அதன் அணுக்கள் சகல திசைகளிலும் சிதறின என்று இந்தத் தத்துவம் கூறுகிறது. சிதறிய பொருட்கள் மண்டலங்களாகவும் விண்மீன்களாக வும் நாம் காணும் சகல பொருட்களாக வும் உருவாயின என்றால் இந்தக் கருத்தில் தவறு என்ன? மேகசுழற்சித் தத்துவத்தில் காணும் அதே தவறுதான் எது வெடித்தது? திடீரென காரியங்கள் தொடங்கின, எல்லா பொருட்களும் ஒரே மூலதளத்திலிருந்து வந்தன என்பதற்கு சான்று உண்டு. ஆனால் அந்த மூலதளம் எது? மேகசுழற்சித் தத்துவத்தைப் போலவே, பலத்த மோதல் தத்துவம் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முயற்சி கூட செய்யவில்லை.

**மாறா நிலை தத்துவம்** (The Steady State Theory)



எல்லாமே. எப்போதுமே இதே போலத்தான் மாறாமல் இருந்து வந்திருக்கின்றன என தேவனை விசுவாசிக் காத பல மக்கள் நம்புகின்றனர். ஒரு வடிவத்தில் இல்லாவிடில் வேறொரு வடிவத்தில் பொருட்கள் எப்போதுமே நீடித்து வருகின்றன என அவர்கள் நம்புகின்றனர். இது மாறா நிலை தத்துவம் என அழைக்கப்படுகிறது. பொருள் தனது அளவையும், உருவத்தையும், நிலையையும் எப்போதுமே மாற்றிக் கொண்டே இருக்கிறது என இது கூறுகிறது. இயற்கை விதி என்னும் ஒரு எளிய விதியின்படி இந்தக் கருத்து ஏற்புடையதல்ல என விஞ்ஞானிகள் அறிவர். ஒரு எளிதான உதாரணத்தைப் பார்க்கலாம்: உங்களுக்கு ஒரு சைக்கிள் கிடைக்கிறது. புதியதில் மிக நன்றாயிருக்கும் இல்லையா? அது பளபளப்பாகவும் மிகவும் நேர்த்தியாகவும் இருக்கிறது. நீங்கள் அதில் சவாரி செய்யும்போது எந்தக் கடமுடா சத்தமோ, சங்கிலி உரசல் சத்தமோ இல்லை.



இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் அந்தச் சைக்கிளின் நிலை என்ன? வண்ணங்கள் ஆங்காங்கே விடுபட்டுப் போய், பல இடங்களில் துருப்பிடித்து, சில நெளிவு சுழிவுகள் ஏற்பட்டு, பெரும் சப்தம் எழுப்புகிறது.

எல்லா பொருட்களும் பழையதாகும்போது, இயற்கையால் பல மாற்றங்களை அடைந்து விடுகின்றன. படைப்பும் சைக்கிளைப் போலவே, ஒவ்வொரு நாளும் பொலிவு இழந்து போகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதை 'வெப்ப மரணம்' என்றும் அவர்கள் அழைக்கின்றனர். ஆனால் நமது உலகம் ஒரு இயற்கை விதிக்குக் கட்டுப்பட்டதாய் இருக்கிறது.

சிருஷ்டிப்பானது துவக்கம் எதுவுமின்றி எப்போதுமே நீடித்திருந் தால், அது ஒரு 200 வருட வயதான, அனாதையாக விடப்பட்ட சைக்கிளைப் போல இருந்திருக்கும். அது முற்றிலுமாக செயலிழந்து தாறுமாறாகப் போயிருக்கும். எந்த ஒரு அமைப்போ ஒழுங்கோ அதற்கு இருந்திருக்காது. ஆனால் அப்படியில்லை என்பது நமக்குத் தெரியும். ஆகாயத்தில் நடைபெறப்போகும் காரியங்களை விஞ்ஞானிகள் இன்று முன்னதாக அறிவிக்க இயலும். மிகத் துல்லியமாகவும், தொடர்ந்து சரியாகவும் இயங்கிக் கொண்டிருக்கும் மிகவும் ஒழுங்கான உலகத்தில் நாம் வசித்துக் கொண்டிருக்கிறோம். நமது பூமி சிருஷ்டிக்கப்பட்டது. அது தொடக்கமின்றி ஆதிமுதல் இருந்ததில்லை.

காலத்தைப் படைத்து அது கடந்து போவதை அனுபவித்திராத ஒரு கடவுள்தான் இயற்கை விதியைத் தவிர்க்க டியும். மற்ற எல்லா பொருட்களைப் போலவே தேவன் அந்த விதியையும் படைத்தார். சிருஷ்டிப்பையும் அவரே படைத்தார்.

சிருஷ்டிப்பு எவ்வாறு தோன்றியது என விளக்க முயலும் வேறு சில கருத்துகளையும் நீங்கள் கேட்கக்கூடும். ஆனால், அவை அனைத்தும் முதல் பொருள் எவ்வாறு உண்டாயிற்று என விளக்கத் தவறி விடுகின்றன. அல்லது விஞ்ஞானம் கண்டறிந்த ஒரு விதிக்கு மாறாகக் கூறுகின்றன. படைப்பு எவ்வாறு படைக்கப்பட்டது என்பதற்கு விவேக மானதும் விஞ்ஞான ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதுமான ஒரே விடை: 'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்' என்பதே.

✝

- John N. Clayton

## எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா ?

**பாவ மன்னிப்புக்காக முழுக்கு ஞானஸ்நானம் பெறுவது ஒரு எளிமையான செயலாயிருந்தாலும் கூட பெரும்பாலான மதப்போதகர்களால் ஏன் அது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது, குழப்பப்படுகிறது மறுக்கப்படுகிறது? குழப்பத்தால் மறுபிறப்பைத் தடுக்க முடியும் என்பதை சாத்தான் அறிந்திருப்பதால் அப்படியிருக்குமோ?**

கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

# மூப்பர், மேய்ப்பர், கண்காணிகள்

சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை

**முன்னுரை:**

1. உலகத்தில் கிறிஸ்தவர்கள் எனப்படும் சபையில் மூப்பர்கள் [Elders], மேய்ப்பர்கள் [Pastors] மற்றும் கண்காணிகள் [Bishops or Overseer] இருக்கிறார்கள்.

2. இவர்களில் மூப்பர் [Elder] என்பவர் ஒரு பிராந்திய சபையில் அதற்கு சம்பந்தப்பட்ட வேலைகளைச் செய்துகொண்டிருப்பார்.

3. மேய்ப்பர் [Pastor] என்பவர் சுமார் 10 முதல் 20 பிராந்திய சபைகளை நிர்வகிக்கிறவராக இருப்பார். அவருடைய அலுவலக பகுதிக்கு குருசேகரம் [Pastorate] என்று பெயர் வைத்திருப்பார்கள்.

4. கண்காணி [Bishop or Overseer] என்பவர் அனேக குருசேகரங்களை ஒருங்கிணைத்த அமைப்பின் தலைவராக இருப்பார். இதற்கு பேராயம் [Diocese] என்று பெயரிட்டிருப்பார்கள்.

5. இப்படியிருக்க இந்த முறை சரிதானா, ஆண்டவர் இந்த அமைப்பை ஏற்றுக்கொள்வாரா என்பதை நாம் கவனிக்கவேண்டும். அநேகர் இதை ஒரு வேலை வாய்ப்பாகக் கருதுகிறார்கள். ஆனால், இந்த முறையில் இணைகிறவர்கள் தங்கள் ஆத்துமாவைக் கெடுத்துக்கொள்கிறார்கள்.

6. இந்த அமைப்பு கி. பி. 600 க்குப் பிறகு ரோமன்கத்தோலிக்கர்களால் அதாவது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பு தேவனால் உண்டானதல்ல என்பதுதான் உண்மை.

**I. தேவனால் ஏற்படுத்தபட்ட சபையில் பொறுப்புகளின் அமைப்பு எப்படிப்பட்டது என்பதை வேத வசனங்களைக்கொண்டு பார்ப்போம்.**

அ. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய மூன்றாம் சுவிசேஷ பயணத்தை முடித்து திரும்பும்போது, மிலேத்து தீவிலிருந்து ஆசியா மைனரிலிருந்த எபேசு பட்டணத்தின் மூபர்களை சந்திக்க விரும்பினார்.

ஆ. ஆகையால் **மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான்**, அப். 20 : 17.

இ. அவர்கள் வந்து சேர்ந்தபோது, அவர்களிடம் சபையாகிய ராஜ்யத்தின் அநேக விஷயங்களை பேசி, பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து உபதேசம் பண்ணினேன் என்றார், அப். 20 : 20.

ஈ. மேலும், தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்த படியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயி ருக்கிறேனென்பதற்கு நீங்களே சாட்சிகள் என்றார், அப். 20: 26 – 27.

உ. எனவே சபையைக்குறித்தும் அதன் அமைப்பு நிர்வாகம் குறித்தும் ஏற்கனவே அவர்களுக்கு போதித்திருப்பர் என்று நம்புகிறோம். ஏனென்றால் இரண்டு ஆண்டுகள் எபேசுவிலிருந்த திறன்னு என்னும் பெயருள்ள ஒருவருடைய பள்ளியிலே போதிக்க இடம் கிடைத்து, யூதருக்கும் கிரேக்கருக்கும் பவுல், கர்த்தருடைய வசனத்தை போதித்திருந்தார், அப். 19 : 9 – 10.

ஊ. அவருடைய மூன்றாம் சுவிசேஷ ஊழியத்தின் சூழ்நிலையில், மிலேத்துவிலே எபேசுவின் **மூப்பர்களோடு** பேசும்போது: ''ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் **கண்காணிகளாக** வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். அப். 20 : 28.

**II. மேற்கண்ட அப். 20 : 28 வசனத்தின் சூழ்நிலையையும் விளக்கத்தையும் தீர்க்கமாகப் புரிந்து கொண்டால்தான் நம்முடைய பாடத்தின் தலைப்பையும் அதன் அர்த்தத்தையும் நம்மால் சரியாகப் விளங்கிக்கொள்ளமுடியும்.**

அ. பவுலானவர் எபேசுவிலிருந்து சபையின் மூப்பர்களை வரவழைத்தார்; அந்த மூப்பர்களிடம் பேசும்போது: தேவனாகிய கிறிஸ்து தம் சொந்த இரத்தத்தினால் சம்பாதித்த அவருடைய சபைக்கு பரிசுத்தஆவியானவர் சபையை மேய்ப்பதற்கும் கண்காணிக்கவும் அவர்களை வைத்தார் என்று திட்டமாகக் கூறினார்.

ஆ. ஆகவே எபேசு சபையிலிருந்து வந்த **மூப்பர்கள்தான்** அந்த எபேசு சபையை **மேய்த்து, கண்காணிக்கவேண்டும்.** இதில் மூப்பர் (Elder) என்பது அவர்களுடைய வயதைக் குறிக்கிறது, ஏனென்றால் அவர்களுக்கு திருமணம் நடந்து விசுவாசள்ள பிள்ளைகள் இருக்கவேண்டும். கீழே கொடுக்கப்பட்ட அவர்களுடைய தகுதிகளில் அவை சொல்லப்பட்டுள்ளது.

இ. மேய்ப்பது (Pastor) என்பது சபையை மெய்யான சத்தியபாதையில் வழிநடத்துவது என்பது ஆகும். இன்றைக்கு கிறிஸ்துவின் உபதேசத்தில் வழிநடத்துவது ஆகும். இதை புரிந்துகொள்ள சங்கீதம் 23 ல் ஓர் அருமையான வசனம் உண்டு.

ஈ. ''**கர்த்தர்** என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின்

பாதைகளில் நடத்துகிறார்,'' சங். 23 : 1 – 3.

உ. அந்த மூப்பராயிருக்கிற மேய்ப்பரே அந்த மந்தையை அதாவது சபையை கண்காணிக்கிற வராயிருப்பார் [Bishop or Overseer]. ஆகவே, மூப்பர் சபையை மேய்க்கிறவராகவும், கள்ளப் போதர்களிடமிருந்து சபையைக் கண்காணிக்கிறவராகவும் இருப்பார். மூப்பர், மேய்ப்பர், கண்காணி ஆகிய பெயர்கள் தனித்தனி நபர்களைக் குறிப்பது இல்லை. அது அவரின் வயதையும், வேலைகளையும் சுட்டிக்காட்டுகிறது.

ஊ. ஒரு பிராந்திய சபைக்கு ஒருவர் அல்ல, ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் மூப்பராயிருக்கவேண்டும். ஒரு பிராந்திய சபையின் மூப்பர்கள் இன்னொரு சபையை மேய்க்கவோ கண்காணிக்கவோ முடியாது. அந்தந்த சபைகளிலே மூப்பர்கள் ஏற்படுத்தப்படவேண்டும். ''அல்லாமலும் **அந்தந்தச் சபைகளில்** அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்திவைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள், அப். 14 : 23.

எ. பவுல் தீத்துவுக்கு எழுதும்போது: ''நீ குறைவாயிருக்கிறவை களை ஒழுங்குபடுத்தும்படிக்கும் பட்டணங்கள்'' தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே' என்கிறார்.

1. இதில் குறைவாயிருப்பது என்பது சபையில் மூப்பர்கள் இல்லாமல் இருப்பது ஆகும். ஒரு பிராந்திய சபை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மூப்பரைக் கொண்டிருக்கவேண்டும்.

2. பட்டணங்கள்தோறும் என்பது அந்த காலத்தில் ஒரு பட்டணத்தில் ஒரு பிராந்தியசபை மட்டுமே இருந்ததாக நாம் வேதத்தில் படிக்கிறோம். ஆகையால்'' ஒரு பட்டணத்து சபையின் மூப்பர் இன்னொரு பட்டணத்து சபையை மேய்க்கவோ கண்காணிக்கவோ முடியாது. ஆகையால் குருசேகரம் [Pastorate] பேராயம் [Diocese] என்கிற அமைப்பு வேதத்தின்படி தவறானது. இது தேவனால் ஏற்படுத்தப்பட்டது அல்ல ; மனிதனால் ஏற்படுத்தப்பட்டது.

3. இந்த வசனத்தில் மூப்பர் என்ற சொல் பன்மையைக் குறிக்கிறது ஒரு நபர் அல்ல, ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் என்று பொருள்.

**III. இனிமேல் மூப்பர்களின் தகுதிகளை கவனிப்போமாக: அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது கீழ்கண்ட தகுதிகளை குறிப்பிடுகிறார், 1தீமோ. 3 : 1–7.**

அ. ''கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை '' இந்த வசனப்பகுதியில் மூப்பரை கண்காணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ. ''ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும்.''

இ. ''அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து'',

ஈ.''தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்.''

உ. ''ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?''

ஊ. ''அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது.'

எ. ''அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும். என்பது ஆகும்.''

**IV. அதே அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதும்போது கீழ்கண்ட தகுதிகளை குறிப்பிடுகிறார். தீமோத்தேயு தீத்து ஆகிய இருவருக்கும் எழுதியவைகளில் அநேக தகுதிகள் ஒன்றாயிருப்பதை நம்மால் கவனிக்கமுடியும், தீத். 1:6-9.**

அ. ''குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம்.''

ஆ.''ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்றவிதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்,''

இ. ''அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கள்ளவனும்,''

ஈ. ''ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம்பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும்.''

உ. ‘‘மூப்பர்கள் நியமிக்கப்பட்ட சபையில் உதவிக்காரார்கள் இருக்கவேண்டும். அவர்கள் மூப்பர்களின் திட்டங்களை செயல்படுத்துகிறவர்களாயிருப்பார்கள், 1தீமோ. 3 : 8 – 12.’’

1. ‘‘அந்தப்படியே, உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும்,’’

2. விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும். மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும்; குற்றஞ்சாட்டப் படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம்.‘

3. ‘‘அந்தப்படியே ஸ்திரீகளும் (உதவிகாரருடைய மனைவிகளும்) நல்லொழுக்கமுள்ள வர்களும், அவதூறுபண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களு மாயிருக்கவேண்டும்.’’

4. ‘‘மேலும், உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களு மாயிருக்க வேண்டும்.’’

முடிவுரை:– 1. அப். 20 : 29–31 ல் நான் (பவுல்) போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே மூப்பர்களுக்குள்ளே) வரும்.

2. உங்களிலும் (மேய்ப்பர், கண்காணிகளிலும்) சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன் என்றார்.

3. அதன்படி அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பிறகு, அநேகர் கள்ளபோதனைகளை சபையில் புகுத்தி தனக்கான கூட்டத்தாரை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

4. 2தெச. 2 : 3–4 வசனங்களில் சொல்லப்பட்டபடி கி. பி. 325 ல் கான்ஸ்டாண்டிநோபில் என்பவர் நிசியா என்னுமிடத்தில் ஒரு கூட்டம் ஏற்படுத்தி, அதில் வேதத்திற்குப் புறம்பான சில கொள்கைகளை ஏற்படுத்தினான்.

5. அவைகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து கி. பி. 600 க்கு பிறகு ரோமன் கத்தோலிக்கம் என்கிற அமைப்பு உண்டானது. கி. பி. 1,600 க்கு பிறகு மார்டின் லூத்தர் என்பவர் அதை சீர்திருத்த முயன்றாலும் அவரால் முழுமையாக செய்யமுடியாமல் ரோமன் கத்தோலிக்க முறைமையையே அநேக விஷயங்களில் ஏற்றுக்கொண்டார். அதில் ஒன்று இந்த குருசேகரம், பேராயம் முறைகள்.

6. முதலாம் நூற்றாண்டு சபையில் இந்த குருசேகரம், பேராயம் முறைகள் இருந்ததில்லை, இது உண்மை. அனைவரும் புதிய ஏற்பாட்டு சத்தியத்திற்கும் முறைமைக்கும் திரும்புவோமாக, ஆமென்!!!

# தேவ ஞானம்

சகோ. K.M. பிலிப் - பவானி

**எ**ல்லா ஞானத்திற்கும் ஊற்றும் காரணமுமாகிய பரலோக தேவனுக்கே மகிமை உண்டாவதாக. I கொ 10: 26 ல் தேவன் ஞானம் வெளிப்படுத்தும் ஒரு சிறப்பு, '' பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது'' என்பதாகும். தேவன் தன் ஞானத்தால் பூமியை நிரப்பினார். படைப்பில் இதுவே உண்மையாகும். தேவன் ஞானம் வெளிப்படுத்திய வார்த்தைக்கு மனிதன் கீழ்ப்படிந்த வரை நிறைவை, செழிப்பை அனுபவித்தான். மீறிய போதோ குறைவுபடத் தொடங்கினான். ஆதியிலே நோவா, மோசே, யோசுவா, ஆபிரகாம் போன்றவர்கள் **கர்த்தர்** கற்பித்தபடியேல்லாம் செய்து (ஆதி 6:22,7:5, யாத் 17:1,36:1) தன் குடும்பத்தையும், திரளான ஜனங்களையும் நேர்த்தியாய் வழி நடத்தினார்கள். இதை நன்கு புரிந்து கொண்ட இளம் வயதில் ராஜாவான சாலமோன் ''கர்த்தர் ஞானத்தை தருகிறார்'' (நீதி 2:6) என்பதை அறிந்து, **ஞானமே முக்கியம்.** என்னத்தை சம்பாதித்தாலும் புத்தியை சம்பாதித்துக்கொள். நீ அதை தழுவிக் கொண்டால் அது உன்னைக் கனம் பண்ணும் என்பதை புரிந்து (நீ 4:5-9) பிதாவாகிய தேவனிடத்தில், அடியேனுக்கு ஞானஉள்ள இருதயத்தை தந்தருளும்' என்று விண்ணப்பித்தான். தேவன் சாலமோனின் ஞானத்தால் நிரப்பினார். மேலும் சாலமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்பதற்கு பூமியிலுள்ள ராஜாக்களெல்லோரும் அவன் முக தரிசனத்தை தேடினார்கள்' என்ற அளவில் தேவன் ஞானத்தால் உயர்த்தப்பட்டான்(1நா 1:1-13).

பிரியமானவர்களே! ''கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தை போதிக்கும் என்பதும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடப்பதை ஞானம்'' என்பதையும் முதலில் நாம் தெளிவாய் புரிந்து கொள்ள வேண்டும் (நீ 15:33,119:98). இதைத்தான் தாவீது உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்' என்று சாட்சியிடுகிறார் (சங்119:100). உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்திரமாக்கிக் கொண்டிருக்கிறேன். அவைகளே என் மகிழ்ச்சி' என்றும் தன் அனுபவத்தை சொல்லுகிறார் (சங்119:111). இந்த அனுபவ சாட்சிகள் சிலவற்றை சத்திய வேதத்தின் வாயிலாக பெற்று ஞானத்தால் கனம் பெறுவோம்.

லட்சக்கணக்கான இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து 40 ஆண்டுகளாக வனாந்தரத்தில் வழி நடத்தி வந்த மாபெரும் தலைவனான மோசேயின் வாழ்க்கையில் தேவ ஞானத்தின் செயல்பாட்டை கவனிப்பது நிச்சயம் நமது விசுவாசத்தை பெலப்படுத்தும். எகிப்து ராஜா பார்வோனின் வளர்ப்பு

மகனாக வளர்ந்த மோசே ஒரு காலகட்டத்தில் பார்வோனுக்குப் பயந்து நாட்டை விட்டே தூரமாய் மீதியான் தேசத்துக்கு ஓடிப் போனான். அங்கு தன் மாமன் மாடுகளை மேய்த்து வந்த நிலையில் ஒருநாள் தேவன் எரிகிற முட்களின் நடுவிலிருந்து மோசேக்குத் தரிசனம் ஆகி எகிப்தில் அடிமைகளாய் வாழ்ந்து வரும் தன் ஜனமாகிய இஸ்ரவேல் மக்களை பார்வோனின் கைக்கு விடுவித்து, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டிய மாபெரும் பொறுப்பைக் கொடுத்தார். அப்பொழுது மோசே தேவனை நோக்கி,''பார்வோனிடத்திற்குப் போகவும், இஸ்ரவேலரை எகிப்திலிருந்து அழைத்து வரவும், நான் எம்மாத்திரம்'' என்ற தன் இயலாமையை வெளிப்படுத்தினான். இதற்கு மேலும் ''நான் வாக்கு வல்லவன் அல்ல. திக்கு வாயும் மந்தனாவும் உள்ளவன்'' என்ற தன் பெலவீனத்தையும் அறிக்கையிட்டான். இது உண்மையே. ஆனால், நம்மை உண்டாக்கினவர் தேவன் என்பதையும், நம்டைய காலங்கள் அவருடைய கரத்தில் இருக்கிறது (சங்31:15) என்ற ஞானம் மோசேக்கு அப்பொழுது இல்லாததால் பயம் அவனை கவ்விக் கொண்டது. தன்னை அழைத்தவரை நோக்காமல் தன்னையே நோக்கிப் பார்க்கும் ஞானமற்ற சிந்தனை மோசேயை பலவீனப்படுத்தியது. ஆனாலும், தேவன் ஆரோனை மோசேயிக்கு துணையாகக் கொடுத்து, இஸ்ரவேலை விடுவிக்கத் தேவையான ஆலோசனையைப் போதித்தார். இதை ஏற்று செயல்பட்ட இருவரையும் குறித்து வேதம் கொடுக்கும் சாட்சியைக் கவனியுங்கள். ''மோசேயும்–ஆரோனும் கர்த்தர் கட்டளையிட்டபடியெல்லாம் செய்தார்கள்'' என்பதாகும் (யாத் 7:6,10,20). இதன் விளைவுதான் ''பார்வோனுக்கு முன் நிற்க நான் எம்மாத்திரம்'' என்று பயப்பட்ட அதே. மோசே, அதே பார்வனுக்கு முன்பாக 10 முறைக்கு மேலாக நேருக்கு நேர் நின்று தேவ வார்த்தைகளை ஞானமாய் உறுதியாய் போதித்து இஸ்ரவேல் மக்களை விடுவித்து தேவ சித்தத்தை நிறைவேற்றினான். கடுமையான எதிர்ப்புகளையும் இலகுவாய் சந்திக்கும் தேவன் ஞானம் மோசேயை வழிநடத்தியது.

அன்பானவர்களே! நாம் ஆராதிக்கும் தேவன், ஞானமற்ற நம்மை அழைத்திருக்கிறார். அவருடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் (யோவான் 1:12). ஆனாலும், தேவன் கொடுக்கும் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தயக்கம் காட்டுகிறோம். தேவையற்றவைகளுக்கு பயப்படுகிறோம் நிமிர்ந்து நின்று காரியங்களை நிறைவேற்ற வேண்டிய நாம், ''நான் எம்மாத்திரம்'' என்று கூனி குறுகிப் போகிறோம். ஆனால், மோசையைப் போல தேவ ஞானத்தால் பெலப்படுவோம்! ''தேவன் தன் பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும், அறிவையும், இன்பத்தையும் அளிக்கிறார்'' (பிர 2:26). மோசேயை சகல காரியத்திலேயும் நேர்த்தியாய் நடத்தின தேவன் நம்மையும் நடத்துவார்.

அது மட்டுமல்ல ''அவர்சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் நடத்துவார்'' (பிர 3:11) என்ற ஞானம் நமக்குள் இருந்தால் பயம் பறந்து போய்விடும். சாதித்துக் காட்டுவோம்.

பிரியமானவர்களே! ஆண்கள் தான் சாதனையாளர்கள் அல்ல. ''புத்தியுள்ள ஸ்த்ரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்'' (நீதி 14:1) வீட்டை மட்டுமல்ல நாட்டையே கட்டுகிறாள் என்பதை 2 சா. 20ல் காண்கிறோம். மகன் அப்சலோமால் துரத்தப்பட்ட தாவீது அப்சலோமின் மரணத்திற்கு பிறகு எருசலேக்குத் திரும்புகிறான். பெரும்பாலான மக்கள் அவனை ராஜாவாக ஏற்றுக் கொண்ட போதிலும், பேலியாளின் மகன் சேபா, தாவீதுக்கு எதிராக தன் கையை ஓங்கி ஒரு கூட்ட மக்களோடு ஆபேலில் குடியேறுகிறான். இதனால் கோபம் கொண்ட தாவிதின் சேனாதிபதி போவாஸ் ஆபேலை அளிக்க முற்றுகை விடுகிறான். விடிந்ததும் ஆபேல் கோட்டைக்குள் இருக்கும் பெரியோர் முதல் குழந்தைகள் வரையிலும், ஆடு மாடுகளான மிருக ஜீவன்களும் நாடும் அழிக்கப்பட்டு போகும். ஆனால், இந்த பேரிழப்பை தடுக்கும் படியாய் ஆபேலில் உள்ள ஒரு ஞானமுள்ள ஸ்த்ரீ ஞானமாய் திட்டமிடுகிறாள். சண்டைக்குப் போகவில்லை, தன் வாயை ஞானம் விளங்க திறக்கிறாள். தளபதி போவாசின் இடத்தில் சத்தமாய் வாயை திறக்கிறாள். கெஞ்சவில்லை. தயையுள்ள போதகம் செய்கிறாள். ''நீர் கர்த்தருடைய சுதந்திரத்தை விழுங்கப் பார்ப்பது என்ன?'' என்ற தேவன் ஞானத்தை வெளிப்படுத்தி சிந்தனையைத் தூண்டினாள். அவன் அவள் வார்த்தைக்கு இசைந்து வந்தான். அவளும் போவாசின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, தன் மக்களிடம் ஞானமாய் பேசி (22) இப்பெரும் பாதகத்துக்குக் காரணமான பேலியாளின் மகன் சேபாவின் தலை வெட்டப்பட்டு கோட்டைக்கு வெளியில் வீசப்பட்டது. யோவாப்பும், அவனது படைகளும் முற்றுகையை கைவிட்டு திரும்பிச் சென்றார்கள். கர்த்தருடைய வார்த்தையை ஞானமாய் பேசி மக்களையும், தேசத்தையும் பெரும் அழிவினின்று காப்பாற்றியது ஒரு ஞானஉள்ள பெண்ணின் பேச்சும் செயலும் ஆகும். அன்பான தேவ பிள்ளைகளே! நம் வாயின் வார்த்தைகளால் குடும்பம் கட்டப்பட வேண்டும்; சபை கட்டப்பட வேண்டும். அப்பொழுது அவள் பிள்ளைகள் எழும்பி அவனை பாக்கியவது என்பார்கள் (நீதி 31:28).

அன்பான தேவ மக்களே! ''நம்முடைய தேவன் ஞானஉள்ளவர்'' (தானி 2:20) இந்த ஞானத்தை சபை மூலமாய் நாம் பெற்றிருக்கிறோம். ''அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வருகிறது'' (எபே 3:10). இதன் மூலம் நாம் ஞானவான்களாகிறோம். புதிய ஏற்பாட்டில் ஞானவான்களின் சாதனை ஒன்றை சற்று கவனிப்போம், ''ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன் ஞானவான்''(நீதி 11:26). அப் 16:22-40 ல் பவுலும் சீலாவும் ஆத்தும் ஆதாயம் செய்ய பிரசங்கம் செய்ததால் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இதை ஞானமாய் யோசித்தால்,

உயர்ந்து நிற்கும் வீடு கட்டப்பட முதல் செயல் குழி தோண்டுவதுதான். அந்த ஆழமான அஸ்திபாரம் தான் வீட்டின் பெலன். அப்படியே ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சோதனைகள் தான் சாதனைகளாக நிமிர்ந்து நிற்கும். சிறையில் அடைக்கப்பட்ட இருவரும் நடு இரவு வரை காத்திருந்தனர். நடுராத்திரியில் பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடினார்கள். சிறைக்கூடம் ஜெப கூடமாக மாறியது. உடனே சிறை அதிர்ந்து, கதவுகள் திறக்கப்பட்டன. எல்லோருடைய கட்டுகளும் கழன்றன. இதில் மனித ஞானம், ''தேவன் நம்மை விடுவித்தார், தப்பி ஓடுவோம்'' என்பதாகத்தான் இருந்திருக்கும். ஆனால், ஞானவான்கள் இருவரும், 'மெய்யான விடுதலை பெற வேண்டிய ஆத்துமாக்கள் விடுவிக்கப்பட வேண்டும்' என்பதேயாகும். காத்திருந்தார்கள். தேவன் நடத்தினார். நித்திரை தெளிந்த சிறைச்சாலைக்காரன் சிறைச்சாலையின் நிலை கண்டு, தன்னைத்தானே கொலை செய்ய முயன்றான். ஆனால், பவுல் சத்தமிட்டு நாங்கள் எல்லோரும் உள்ளே தான் இருக்கிறோம் என்றும், நாங்கள் தேவனுடைய பிள்ளைகள்; ஒரு ஆத்துமாவையும் இழந்து போவது தேவனுக்குப் பிரியமான காரியம் அல்ல என்பதை வெளிச்சம் போட்டு காட்டினார்கள். இந்த ஞான வெளிச்சம் சிறைச்சாலைக்காரன் இருள் சூழ்ந்த இருதயத்திற்கு ஒளியூட்டியது. அவன் குடும்பமாக, அவனோடு இருந்தவர்களும் பாவம் இருளிலிருந்து விடுதலை பெற வழிகாட்டியது. எல்லோரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அன்பானவர்களே! தேவப்பிள்ளைகளின் ஆத்தும ஆதாயச் செயல் பூலோகத்தில் மட்டுமல்ல, பரலோகத்திலும் மாபெரும் மகிழ்ச்சியை உருவாக்கிற்று [லூக் 15:7]. தேவ ஞானம் சாதித்தது. சர்வவல்ல தேவன் விடிந்ததும் பவுலையும், சீலாவையும் விடுவித்தார். தேவ ஞானம் பெற்ற நாம் தொடர்ந்து ஆத்தும ஆதாயம் செய்வதில் ஞானவான்களாய் திகழ்வோம். சபையை வளர்ப்போம். தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமேன்!

✝

## உண்மையான அன்பு – பொய்யான அன்பு

| | | | |
|---|---|---|---|
| 1. | நேர்மையாகப் பேசும் | – | நேர்மையற்றுப் பேசும். |
| 2. | கண்டிப்பும், கடிந்து கொள்ளுதலும் இருக்கும் | – | வெளிவேடமும், விஷமத்தனமும் இருக்கும். |
| 3. | தவறை தைரியமாக எதிர்கொள்ளும் | – | தண்டனைக்குத் தப்பிக்கொள்ள வழிதேடும். |

# எனக்காக யாவும் செய்து முடிக்கும் தேவன்

Bro. **பாண்டியன்**

**தே**வனுடைய பிள்ளைகளுக்கு இருக்கக்கூடிய பெரிய நம்பிக்கை– ‘‘கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்’’ என்பதே. [சங் 138:8] உலகில் பணக்காரர்களின் பிள்ளைகள் ஒரு வேலை இப்படி நம்புவது, அதாவது என் தகப்பன் எனக்காக எல்லாம் செய்வார் என்று எதிர்பார்க்கலாம். ஆனாலும், வியாதி, விபத்து, கிரிமினல் குற்றங்கள் போன்ற சூழ்நிலையில் பணமோ, டாக்டரோ, போக்குவரத்து சட்டங்களோ, வக்கீலோ பிரயோஜன மில்லாமல் போவதை நாம் காண முடிகிறது. எனவே, ஆரோக்கியம், பாதுகாப்பு, நிம்மதி போன்ற விஷயங்களை தேவனைத் தவிர வேறு யாரும் தர இயலாது. இஸ்ரவேல் ஜனங்கள் உருவானபோது அடிமைத்தனத்தில் அவர்கள் படும் உபத்திரங்களைப் பார்த்து, அவர்கள் கூக்குரலைக் கேட்டு, வேதனைகளை அறிந்திருக்கிறேன் என்றவர் அல்லவா நம் தேவன்? அதே தேவனை நாம் இப்பொழுது தொழுது கொண்டிருப்பதால் நாமும் எனக்காக யாவும் செய்து முடிக்கிற தேவன் என்று தைரியமாக சொல்லலாம்.

முதலாவது, நமக்கானதை அவர் திட்டமிட்டு செய்து முடிக்கிறவராக இருக்கிறார். [ஏசா 46:11] என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைக்கொண்டு அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன், என்றும் தொடர்ந்து சீயோனில் இரட்சிப்பை, கட்டளையிடுவேன் என்பதும் புதிய ஏற்பாட்டில் சபையைக் குறிக்கும் அடையாளமாக உள்ளது. அவருடைய ஞானம் சபையின் மூலமாக தெரிய வருவதால் தேவன் சபையை திட்டமிட்டு இயேசுக்கிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றினார். அது உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினது என்கிறார் பவுல். நமக்கான காரியங்களை அப்போஸ்தலர் மூலமாகவும் திட்டம் பண்ணினார் [1 கொரி 7:17, 11:34] இப்படி நமக்கான காரியங்களை திட்டமிட்டு செய்து முடிப்பதால் நம்முடைய ஆசைகள் சில சமயம் நிறைவேறாமல் போகலாம். ஆனால், நாம் அவருக்குப் பயந்து நடக்கும் போது அவர் உண்டு பண்ணி வைத்திருக்கிற நன்மை எவ்வளவு பெரிதாய் இருக்கிறது என தாவீது ஆச்சரியப்படுகிறார் [சங் 31:19].

அதேசமயம் நமது வாழ்க்கையில் தேவன் அவருக்குச் சித்தமானதை செய்து முடிக்கிறார் என்று சங்கீதம் 135:6 ல் காண்கிறோம். பூமியில் மாத்திரமல்ல, வானத்திலும் சமுத்திரத்திலும் கூட அவருக்குச் சித்தமானதை செய்கிறார். அதனால் தான் யாக்கோபு புதிய ஏற்பாட்டில் நாளைக்கு நடப்பது உங்களுக்கு தெரியாதே!

ஆதலால் ஆண்டவருக்குச் சித்தமானால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும் என்கிறார் யாக் 4:14. அதேபோல எந்த பொருளாதாரத்தில் இருந்தாலும் அந்த, குடும்பத்தில் உள்ள உறவுகளை நாம் அங்கீகரிக்க வேண்டும், பெற்றோரை மதிக்க வேண்டும். குறைகளை மறந்து தேவ சித்தம் நிறைவேற பிரயாசப்படுங்கள். தமது குமாரனையே அளித்தவர் மற்ற எல்லாவற்றையும் அருளுவார். (ரோம 8:32)

அடுத்து, தேவன் நமக்கு வாக்குப் பண்ணினதைச் செய்து முடிக்கிறார். (ரோம 4:21) ஆபிரகாம் அப்படி அவர் நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று விசுவாசித்தான். சபை வாழ்க்கையில் நாம் இப்படிப்பட்ட விசுவாசத்தில் வளருவதே அவசியமாயிருக்கிறது. நமக்கும் தேவன் அநேக வாக்குத்தங்களை கொடுத்திருக்கிறார். அதில் பிரதானமானது – முதலாவது தேவ ராஜ்யத்தையும் அவருடைய நீதியைத் தேடும்போது உணவு, உடை, நாளைய தினக் கவலை போன்ற எல்லாவற்றிலும் தேவன் நம் தேவைகளைச் சந்திக்கிறார் என்பதே பலர் தங்கள் தேவைகளுக்காக தவறான வழியில் செல்ல முயற்சிக்கிறார்கள். ஆனால், நாம் தேவனுடைய வார்த்தையை நம்பி, நம் தேவைகளை ஜெபத்தில் அவருக்குத் தெரிவிக்கும் போது தேவ சமாதானத்தை நமக்குக் கிடைக்கப் பண்ணுகிறார். ஆனால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு பொறுமை உங்களுக்கு வேண்டியதாய் இருக்கிறது. (எபி 10:36)

தொடர்ந்து நம்மில் நற்கிரியை தொடங்கினவர் அதை செய்து முடிக்கிறார்? உங்களில் நற்கிரியைத் தொடங்கினவர் அதைக் கிறிஸ்துவின் வருகை வரை நடத்தி முடிப்பார் என பவுல் குறிப்பிடுகிறார் (பிலி 1:5). நாம் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத்தரித்துக் கொண்டிருக்கிறோம். நம் நடக்கை கிறிஸ்துவை வெளிப்படுத்த வேண்டும். எப்படி உடைகள் போலீஸ், ராணுவம், வக்கீல், டாக்டர் என்று அடையாளப்படுத்தப்படுகிறதோ அதைப்போல கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம்முடைய பேச்சு, பார்வை, நடக்கையே நம்மை கிறிஸ்தவர்களாக அடையாளப்படுத்த வேண்டும். நாம் உலகத்துக்கு வெளிச்சம்–அதாவது நற்கிரியை மூலம் பிதா மகிமைப்படும்படி நடந்து கொள்ள வேண்டும் என்றார் இயேசு. புறஜாதிகள் மத்தியில் நல் நடக்கை வேண்டும் என்கிறார் பேதுரு (1பேது 2:12) அதற்கு தேவன் நமக்கு உதவி செய்கிறார்.

**சரி ஏன் எனக்காக தேவன் யாவற்றையும் செய்து முடிக்கிறார்?**

1. அவரே நம்மை உண்டாக்கினார். நாம் அவர் ஜனங்களும் மேய்ச்சலின் ஆடுகளும் (சங் 100:3).
2. நாம் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டு அவரிடத்தில் அன்பு கூருகிற படியால் (ரோமர் 8:28).

3. அவருடைய துதியைச் சொல்லி வரும்படி ஏற்படுத்தியிருப்பதால் (ஏசா43:21).

4. தேவன் தமது ஜனங்களுக்காக வைராக்கியம் வைத்து அவர்களுடைய கிரியைகளை நடத்தி வருகிறார் (ஏசா 26:12).

5. நம் சிறு வயது முதல் நம்மை ஆதரிக்கிறவர் மட்டுமல்ல நம் தாயின் கர்ப்பத்தில் நம்மைக்காப்பாற்றியவர் (சங் 71:7, சங் 139:13)

6. நாம் அவருக்குப் பயந்து அவரைத் தேடுகிறவர்களானபடியால் ஒரு நன்மையும் குறைவுபடாது (சங் 34:8).

பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, அவர் சொன்னால் செய்வார் (எண் 23:9). ஆகவே, தாவீது பக்தனைப் போல, ''எனக்காக யாவையும் செய்து முடிக்கப் போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்'' (சங் 57:2) என்று அவரை அண்டிக்கொள்வோம். தேவ ஆசீர் உங்களோடே இருப்பதாக.

✝

---

## கிறிஸ்துவத்தை எப்படி வெளிப்படுத்துவது ?

- ❃ குடும்பத்தில் - அன்பாலும், தன்னலமற்ற தன்மையாலும்
- ❃ வியாபாரத்தில் - நேர்மையினாலும், கவனத்தாலும்
- ❃ சமுதாயத்தில் - தயவாலும், தாழ்மையினாலும்
- ❃ பெலவீனர்களிடத்தில் - பொறுமையினாலும், உதவியினாலும்
- ❃ துன்மார்க்கரிடத்தில் - நீதானத்தாலும், தீமையை வெல்லுவதாலும்.

✝

---

## 14.07.2024 - சென்னை, தி.நகர், கண்ணம்மா பேட்டையில் நடந்த இலவச மருத்துவ முகாமின் போது...







## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Heaven TV
Every Thursday, Friday, Saturday 6:30 - 7.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 6.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/2024 - 2026
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்















## எங்களது இதர வெளியீடுகள்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

### வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701. தமிழ்நாடு, இந்தியா.

To:

**திருமறை தியானம்**

**நம்பிக்கை TV**
செவ்வாய் – காலை 6:30 - 7:00 மணி

**ஹெவன் TV**
வியாழன், வெள்ளி, சனி – காலை 6:30 - 7:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.